தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

திங்கட்கிழமை, 1981 ஏப்ரல், 27

சித்திரை 15, துன்மதி—திருவள்ளுவர் 2012.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் உள்ள சட்டப்பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

" பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்."

மயிலிறகு ஏற்றும் வண்டியேயானாலும் அந்தப் பண்டமும் அளவோடு ஏற்றாமல் அளவு கடந்து மிகுதியாக ஏற்றினால் அச்சு முறியும்.

1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

கொங்கர்குளம் கண்மாயில் மீன் பிடிக்கும் உரிமை.

*வினா எண் 889—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டை கொங்கர்குளம் கண்மாயில் மீன் பிடிக்கும் உரிமையை அரசினர் பொது ஏலத்தில் விட உத்திரவிடுமாறு அக்குளத்தின் ஆயக்கட்டுதாரர்களிடம் இருந்து விண்ணப்பம் ஏதும் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (அ) ஆம்.

(ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

வடாற்காடு மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தை வேறு இடத்திற்கு மாற்றும் திட்டம்.

* வினா எண் 890.—திரு. இல. பலராமன்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தை கோட்டையிலிருந்து வேறு இடத்திற்கு மாற்ற அரசு உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எந்த இடத்திற்கு மாற்றப்படும் ?